விலை ஒரு அணா

REGD. M 4642

# திராவிடநாடு

மலர் 7 | 12—9—48 | இதழ் 18

# திருவத்திபுரத்தில் இரணியன் கைது

## லீலாவதி—பிரகலாதனும் கைது

## நரசிம்மசாமியும் சிறையில்

கவிஞர் பாரதிதாசன் அவர்களால் இயற்றப்பெற்ற இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகம், காஞ்சி சீர்திருத்த நாடக சபையின் அமைப்பாளரான தோழர் வே. சம்பந்தன் அவர்களின் முயற்சியால். காஞ்சிபுரத்தில் இருந்து 18 கல் தொலைவில் இருக்கும் திருவத்திபுரம் (வடாற்காடு) என்ற ஊரில் 5—9—48-ல் நடைபெற்றது.

பதினைந்து ஆண்டுகளாகத் தமிழ் நாடெங்கும் பொதுமக்களின் ஆதரவோடு நடிக்கப்பெற்ற இந்த நாடகத்தை இன்றைய சர்க்கார் தடை செய்ததானது, மக்களின் எழுத்துரிமையையும், அறிவு வளர்ச்சியையுமே தடை செய்கின்றனர் என்பதைப் பொதுமக்களுக்கு உணர்த்தவும், தமிழ் மக்களின் நியாயமான உரிமையைப் பாதுகாக்கவுமே, சர்க்காரின் தடையுத்தரவையும்பொருட்படுத்தாமல், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள், தனிப்பட்ட முறையில் இந்த நாடகத்தை நடத்தினர் என்று தெரிகிறது.

மேற்படி நாடகம் சர்க்காரால் தடை செய்யப்பட்ட தென்பதை ஏற்கெனவே தெரிந்திருந்த மக்கள் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் திருவத்திபுரத்தில் அன்று காலையில் இருந்தே கூடிவிட்டனர்.

ரிசர்வ் போலீஸ் படையும் லாரி சகிதம் வந்து தயாராக இருந்தது.

அன்று பிற்பகல் போலீஸ், தண்டோரா மூலம் 'இந்நாடகம் தடை செய்யப்பட்டிருக்கிற தென்றும், பொதுமக்கள் அதனைப் பார்க்கக் கூடா'தென்றும் விளம்பரம் செய்தனர்.

இரவு ஒன்பது மணிக்கு நாடகம் தொடங்கி நடைபெற்றது. மூன்று காட்சிகள் முடிந்து நான்காவது காட்சி நடக்கும்போது போலீசார் வந்து நடிகர்கள் பதினொரு பேரையும் அமைப்பாளரையும் கைது செய்து லாரியில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

நடிகர்கள், இரணியன் வேஷத்திலும் பிரகலாதன் வேஷத்திலும், நரசிம்ம வேஷத்திலும் மற்றும் நடிகர்கள் அவரவர் வேஷங்களிலும் போலீஸ் லாரியில் ஏறிச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நடிகத் தோழர்கள் கைது செய்யப்பட்டதும் அங்கு குழுமியிருந்த ஐயாயிரத்துக் மேற்பட்ட பொதுமக்களைத் தோழர்கள் காஞ்சி கலியாணசுந்தரனும், வி. கண்ணப்பரும், புலவர் கோவிந்தனும் ஊர்வலமாக அழைத்துவந்து அமைதியாகச் செல்லுமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்கக் கூட்டம் எவ்வித கலவரமுமின்றிக் கலைந்து சென்றது.

கைது செய்யப்பட்ட நடிகத் தோழர்கள் திருவத்திபுரத்திலுள்ள சப்ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதான தோழர்களின் விபரம்:—

திருவத்திபுரம் தோழர் ப. சு. பூங்காவனம் (அமைப்பாளர்)

நடிகர்கள்:—

காஞ்சிபுரம் தோழர்கள்

வே. சம்பந்தன்—இரணியன்
ஆர். கிருஷ்ணமூர்த்தி—சேனாபதி
எம். சண்முகம்—நரசிம்மசாமி, காங்கேயன்
பி. கச்சபாலயம்—சித்திரபானு
எம் கணபதி—பிரகலாதன்
வி. கோபால்—கஜகேது
எம். இராசமன்னார்—லீலாவதி
கே. சுப்பிரமணியம்—மகரிஷி
இ. எத்திராஜ்—தூதுவன்
வி. என். மார்க்கு— ,,
பி நாராயணசாமி—மந்திரி

சர்க்காரின் அடக்கு முறையைக் கண்டு வேதனைப்பட்ட பொதுமக்கள், இந்த நாடகத்தை இன்னும் பல ஊர்களில் நடத்திச் சர்க்காரின் கொடுங்கோல் ஆட்சி முறையைப் பொதுமக்கள் உணரும்படி செய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டனர்.

# காலப்போக்கை உணராத ஹைதராபாத் நிஜாம்

[வாசுதேவன்]

உலகிலேயே பெரிய பணக்காரராக மட்டுமல்லாமல், பிரான்சைப் போன்ற அளவுள்ள ஒரு சமஸ்தானத்தில் சுமார் 20,000,000 மக்கள் மீது ஆட்சி செலுத்துவோர் யாராவது உண்டா?

அத்தகைய ஆசாமி ஒருவர் இருக்கிறார். அவர்தான் மெலிந்த உருவும், கூனவிழுந்த தோற்றமும் உடைய ஹைதராபாத் நிஜாம்.

அவரது முழுப்பெயர் "ஹிஸ் எக்ஸால்டட் ஹைனஸ் ரஸ்டம்-இ-டவ்ரான், அரஸ்டு-இ-ஜமான், லெப்-ஜெனரல் முஸபர் முல்க், வால்மாலிக், நவாப் மீர் உஸ்மான் அலிகான் பகதூர், நிஜாமுல்-முல்க், அஸப்ஜான், ராயல் விக்டோரியன் செயின், ஜி. ஸி. எஸ். ஐ., ஜீ. ஐ. இ." என்பதாகும். இத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நம்பிக்கையுள்ள கூட்டாளி என்ற வாக்கியங்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

தம்மிடம் எவ்வளவு செல்வமிருக்கிறதென்று நிஜாம் வெளிக்குச் சொல்வதில்லை. உண்மையில் அது அவருக்கே தெரியாது. ராஜ அரண்மனைக்கு அடியில் குண்டுகளுக்கு மசியாத நிலவறைகளில கைபடாமல் கிடக்கும் தங்கக் கட்டிகள், வைரங்கள், முத்துக்கள், மரகதங்கள் இவற்றிற்குக் கணக்கு வழக்கே இல்லை.

தினசரி இரண்டு முறை அவர் அந்த நிலவறைகளைச் சுற்றி வருகிறார். அந்த நிலவறைக்குள் ஒரு கருநாகம் காவல் புரிந்து கொண்டிருக்கிறது. நிஜாமின் சொத்தும், சுகமும் அந்தச் சர்ப்பத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலவறைக்குச் செல்ல ஒரே ஒரு வழிதானிருக்கிறது. அது நிஜாமின் சயனக்கிரகத்திலிருந்து ஒரு கதவு வழியாகக் கீழே நோக்கிச் செல்லும் கற்படிகளேயாகும். பாதைகளிலிருந்து அந்நிலவறைகளை நிர்மாணித்த கல தச்சர்கள் இறந்து வெகுகாலமாகிவிட்டது.

மதிப்பிட முடியாத இந்தச் செல்வத்தை யல்லாமல் நிஜாம் ஒவ்வொரு வருடமும் தமது சொந்த எஸ்டேட்டிலிருந்து 30 இலட்சம் பவுன் வருவிக்கிறார். போதாததற்குச் சமஸ்தானத்தின் வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் சுமார் 4 இலட்சம் பவுன்கள் அவருக்கு ஒதுக்கப்படுகிறது.

நிஜாமின் சொந்தத் தேவைகள் மிகச்சில. அவர் மிகவும் கருமித்தனமான வாழ்க்கையைத்தான் நடத்துகிறார். மலிவான லினன் பிஜாமாக்களும் ஒரு நீண்ட மேலங்கியும் அணிந்து கொள்கிறார். ஒரு பென்னிக்கு 10 வீதம் விற்கப்படும் சிகரட்டுகளையே பிடிக்கிறார். 20 வருடங்களுக்கு முன் வாங்கிய பழைய மோட்டாரை இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறார். நிஜாமின் பிறந்த தினத்தன்று விலையுயர்ந்த சன்மானங்களை அவருக்களிக்கும் பெரிய ஜாஹிர்தார்கள் வசிக்கும் ஆடம்பரமான மாளிகைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் அவர் வசிக்கும் கிங்கோட்டி அரண்மனையைப் பெரிய பங்களா என்றுதான் சொல்ல வேண்டும்.

குதிரைப் பந்தயங்களிலோ அல்லது சினிமாப்படம் பார்ப்பதிலோ அவருக்கு ஆசையில்லை. மகாராஜாக்கள், நவாபுகளுக்கியல்பான படாடோபங்களும், ஆடம்பரங்களும், நிஜாம் சபா மண்டபத்தில் காண முடியாது. உர்து, அரபி, பாரசீகம் ஆகிய பாஷைகளில் பண்டிதரான அவர் சில சமயங்களில் கவிதை எழுதுவதுண்டு.

அதி காலையில் துயிலெழும் நிஜாம் கொஞ்சம் காலை ஆகாரத்திற்குப் பின்னர் தமது தினசரி வேலைக்குத் தயாராகிவிடுவார். காலை ஆகாரத்தின் போதே முதல் காரியமாகப் பத்திரிகைகளைப் படிக்கிறார். பால் போடாத காப்பியைக் குடித்துக்கொண்டே எல்லா அரசாங்க தஸ்தாவேஜுக் கட்டுகளையும் கவனமாய் ஆராய்கிறார். நிர்வாக சம்பந்தமான சிறு விஷயமும் அவர் கண்களுக்குப் படாமல் தப்புவதில்லை. மாதம் 30 பவுனுக்கு அதிகமான சம்பளம் கொடுக்கக்கூடிய எந்த நியமனத்திற்கும் அவரது அனுமதியைப் பெற்றாக வேண்டும்.

கொள்கை சம்பந்தமான அறிக்கை உத்தரவுகள், அல்லது பாராட்டுகள் எல்லாம் சர்வாதிகார தோரணையில கட்டளை என்ற பெயருடன் வெளியிடப்படுகின்றன.

"டில்லிச் சக்ரவர்த்தியாயிருந்த போதிலும் அவரது தாய்க்கு அவன் குழந்தையே யாவான்" என்று ஒரு பாரசீகப் பழமொழி உண்டு. அதைப் போலவே நிஜாம் தாயிடம மிகவும் பற்றுள்ளவர். 40 வருடங்களுக்கு முன் இறந்துபோன தாயின் சமாதிக்கு சூரியாஸ்தமனத்திற்கு முன் சென்று வணங்குவதை ஒரு மதக் கடமையைப் போலக் கடைப்பிடித்து வருகிறார். இதுவே அவரது தேகப்பயிற்சியுமாகும்.

பிற்பகலில் கடிகாரத்தில் மணி ஐந்தடித்ததும் மஞ்சள் தொப்பியணிந்த போலீஸார் நிஜாம் சமாதிக்குப் போவதை அறிவிக்கும் வகையில் "தாரை" ஊதுவார்கள். 6 மைல் நீளமுள்ள பாதை நெடுக வண்டிப் போக்குவரத்துத் தடுத்து நிறுத்தப்படும். பஸ்கள் ஆங்காங்கு நின்று விடுவதோடு வழிப்போக்கர்கள் ரஸ்தாவுக்கு அருகில் கூட வர அனுமதிக்கப்படுவதில்லை. மூக்கு கண்ணாடியணிந்த நிஜாம் அமர்ந்திருக்கும் பழைய ஹம்பர் வண்டி போகும் வரையில் நாய்கள்கூட அந்தப்பக்கமாய் தலைகாட்டுவதில்லை.

நிஜாமின் பிரஜைகளில் 85 சதவிகிதத்தினர் இந்துக்களாயிருந்த போதிலும் மைனாரிட்டியாகவுள்ள முஸ்லிம்கள்தான் சமஸ்தான ராணுவம், போலீஸ் உட்பட உயர்தரப் பதவிகளில் 70 சதவிகிதத்தை தங்கள் வசம் வைத்துள்ளனர். ஹைதராபாத்தில் வகுப்புக் கலகம் எதுவும் ஏற்படவில்லை. எனினும் இந்தியா சுதந்திரம் பெற்ற வேகத்தில் நிஜாமின் சமஸ்தானத்திலும் ஒரு அரசியல் கொந்தளிப்புக் குமுறிக் கொண்டிருக்கிறது.

நிஜாம் பொறுப்பாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்றும், ஹிந்து மெஜாரிட்டியினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தை ஜனநாயக ரீதியில் அமைக்கவேண்டுமென்றும் இந்திய அரசாங்கம் வலியுறுத்துகையில் நிஜாம் "வாய் வேதாந்தம்" பேசிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது.

"இந்துக்களும், முஸ்லீம்களும் எனது ஆசைக்குரிய குழந்தைகளாவார்கள்" என்றும், "சமஸ்தானத்தின் முகத்திற்கு இரு விழிகளைப் போன்றவர்கள்" என்றும் அவர் சொல்கிறார். காலத்தை அனுசரித்து நடந்துகொள்ள அவர் சித்தமாயிருக்கிறாராம். ஆனால் படிப்படியாகத்தான் போகவேண்டுமென்கிறார். பழைய முறையை ஒரே நாளில் மாற்றிவிட முடியாது. அப்படிச் செய்தால் கடுமையான சமுதாயக் குழப்பம் ஏற்படுமென்கிறார்.

நிஜாமைக் கடவுளைப் போலவும், எஜமானனைப் போலவும் ஆதரிப்பது, நடுத்தரவயதுள்ள லாயரான காசீம் ராஸ்வியைத் தலைவராகக் கொண்ட இத்திகாதுல் முஸ்லிமீன் என்ற அரசியல் கட்சியாகும். இந்திய சர்க்காரின் கண்களை உறுத்திக் கொண்டிருப்பது இந்த இத்திகாதுல் ஸ்தாபனந்தான். இது அரசியல் கட்சியல்ல; ஆயுதங்களைத் தாங்கிய கொள்ளைக்காரர்களையும், குண்டர்களையும், கொண்ட ஒரு கோஷ்டி என்று இந்திய சர்க்கார் பேச்சாளர்கள் கூறுகின்றனர்.

இந்த ஸ்தாபனத்தின் தொண்டர்களான ரஸாக்கர்களே ஹைதராபாத்திற்குள்ளும் இந்திய எல்லையிலும் நடக்கும் கொலை, கொள்ளை, கிராமங்களின்மீது நடக்கும் தாக்குதல், போக்குவரத்துச்சாதனங்களைத் துண்டித்தல் ஆகிய கிருத்யங்களுக்கு பொறுப்பாளிகள் என்றும் கருதப்படுகிறது. இதற்கு மாறாக ரஸாக்கர்கள் தங்களை ஜனங்களின் படை என்றும், கம்யூனிஸ்டு கிளர்ச்சியை எதிர்த்து போராடுவதில் சமஸ்தானப்போலீசுகளுக்கும், துருப்புகளுக்கும் உதவி செய்வதாகவும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.

பெரிதும், சிறிதுமான சுமார் 600 இந்திய சமஸ்தானங்களின் மன்னர்கள் ஏதோ ஒரு வகையில் இந்திய யூனியனுடன் சேர்ந்திருக்கையில் நிஜாம் விலகி நின்றுகொண்டு இந்திய சர்க்காருக்கு காஷ்மீரைப் போன்ற சிக்கலான ஒரு பிரச்னையை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார். தம்மை அழிக்கக்கூட முடியாதென்றும், பயமுறுத்தமுடியாது என்றும் அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார்

எதிர் நோக்கியுள்ள சிலமாதங்கள் நிஜாமிற்கு ஒரு பெரிய சோதனைக் காலமாக இருக்கும். அவருடைய அநேக பட்டங்களில் ஒன்று அஸப் ஜாடன் என்ற பட்டம். இதற்கு "அஸபிற்கு சமமானவர்" என்று அர்த்தமாகும். அஸப் சாலமன் மன்னர் சபையின் பிரதம மந்திரியாயிருந்தவர். தற்போதைய நெருக்கடியை இருதரப்பிற்கும் திருப்தியளிக்கும்படி தீர்ப்பதற்கு சாலமனின் விவேகமெல்லாம் நிஜாமிற்குத் தேவைப்படுமென்பதில் சந்தேகமில்லை.

(தமிழ் முரசு)

## முறை மாறுகிறது

—*—

இந்தி எதிர்ப்புக்காக மறியல் செய்பவர்கள் முதலில் ஊர்வலமாக வந்து மறியல் செய்தனர். சர்க்கார் தடை எதுவும் செய்யவில்லை. பின்னர் மறியல் செய்பவர்கள் ஊர்வலமாகப் போகக்கூடாது என்று சர்க்கார் கூறிற்று. மறியல்செய்பவர்கள், 'நாங்கள் ஊர்வலம் நடத்தவில்லை; மறியல் செய்யவே போகிறோம்' என்று கூறினர். சர்க்கார் மறியலுக்குச் செல்பவர்களை லாரியில் ஏற்றிக் கொண்டுபோய்க் காடுகளில் விட்டனர். இப்போது மறியல் செய்பவர்களைக் கைது செய்து ஊர்வலம் நடத்தினார்கள் என்று குற்றம் சாட்டிச் சிறைக்கு அனுப்பும் முறையை மேற்கொண்டுள்ளனர். 7-8-48-ல் மறியல் செய்த 'போர்வாள்' ஆசிரியர் தோழர் காஞ்சி மணிமொழியார் உட்படப் பதினாறு பேருக்கு ஒருவாரச் சிறைவாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனியும் என்னென்ன முறைகளைச் சர்க்கார் கையாளுமோ தெரியாது. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். இந்தி ஒழியும் வரையில் சர்க்காரின் எந்தவிதமான அடக்குமுறைகளையும் பொருட்படுத்தாமல் கடைசிவரை போராடியே தீருவார்கள் என்பதை மட்டும் சர்க்கார் நினைவில் வைத்துக் கொள்ளட்டும்.

# வெட்கப்படாமல்வேறென்னசெய்வது?

—●—

காலும் காலும் அரை. காலும் அரையும் முக்கால். முக்காலும் காலும் ஒன்று. இந்த ஒன்றை ஒன்றேகால் ஆக்கவேண்டுமானால் மேற்கொண்டும் ஒரு கால் சேர்க்க வேண்டும். அப்பொழுது ஒன்றும் காலும் ஒன்றேகால் என்றாகின்றது. ஒன்றேகால் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கணக்கைக் குறிப்பதாகும். ஒன்றுக்கு மேற்பட்டு ஒன்றேகால் ஆனகணக்கை அதோடு நிறுத்திக்கொள்ளாமல், விரும்பினால், மேலும் மேலும் வளர்த்துக் கொள்ளலாம். இங்ஙனம் அந்தக் கணக்கை வளர்ப்பதற்கு இரண்டு முறைகளைக் கையாளலாம். ஒன்று கூட்டுதல். இன்னொன்று பெருக்குதல். எடுத்துக்காட்டாக நாலுடன் ஆறைச் சேர்த்தால் பத்தாகிறது. இது கூட்டல் கணக்கு. ஆனால், நாலை ஆறால் பெருக்கினால் இருபத்து நாலாகிறது. இது பெருக்கல் கணக்கு. எனவே கூட்டல் முறையைப் பார்க்கிலும் பெருக்கல் முறை தொகையை மிக விரைவில் அதிகப்படுத்திக் காட்டுகிறது.

சென்னை அரசாங்கத்தின் இன்றைய அடக்குமுறை இருக்கிறதே, அது, நாம் மேலே எடுத்துக்காட்டிய கூட்டல் முறையில் சேர்ந்ததல்ல. பெருக்கல் முறையில்தான் சென்னை அரசாங்கம் தன்னுடைய அடக்குமுறைக் கணக்கை மிக மிக விரைவில் அதிகப்படுத்திக்கொண்டு போகிறது. அதிகப்படுத்துவதில் கூட ஒரு அளவு இருக்குமே, அந்த அளவையும் மீறிச் செல்கிறது சென்னை அரசாங்கத்தின் அடக்குமுறை. அந்நிய ஆட்சி ஒழிந்து, சுதந்திர ஆட்சி கிடைத்தால் என்னென்ன நன்மைகள் நமக்குக் கிடைக்கும் என்று மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்களோ, அந்த ஆவலை நிறைவேற்றிவைக்கும் முறையில், "இதோ பாருங்கள் எங்கள் ஆட்சி முறையை, ஆங்கிலேயனுடைய அருளால், அவன் அன்புக் காணிக்கையாக நமக்களித்த அடக்குமுறைப் பாணங்களை எல்லாம் அள்ளி அள்ளி உங்கள்மீது வீசுகின்றோம்; அன்போடு வரவேற்றுக் கொள்ளுங்கள்; ஆங்கிலேயனுடைய நாலும் ஆறும் பத்தென்ற கூட்டல்

(5-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 12—9—48 [ஞாயிறு


## பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்

●

கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடக நூலை இயற்றிப் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. நாடகம் இயற்றப்பட்ட காலத்திலிருந்தே அது நடிக்கப்பட்டும் வருகின்றது. இதுவரை நூற்றுக் கணக்கான இடங்களில் நடிக்கப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான மக்கள் அந்த நாடகத்தைப் பார்த்திருக்கின்றனர். பற்பல அதிகாரிகள், மந்திரிகள் முன்னிலையில் கூட அந்த நாடகம் நடிக்கப்பட்டிருக்கிறது. ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலும் நடிக்கப்பட்டது. ஆங்கில ஏகாதிபத்திய பாதுகாப்பின் கீழ் மாகாண நிர்வாகத்தை நடத்திய ஆச்சாரியார் ஆட்சிக் காலத்திலும் நடத்தப்பட்டது.

அப்போதெல்லாம், இந்த நாடகம் மக்களால் பார்க்கப்படக்கூடாதென்பதற்குரிய காரணங்களை எந்த அதிகாரிகளும், பொதுமக்களும் கண்டுபிடிக்கவும் இல்லை. தடை விதிக்கவும் இல்லை.

இப்போது இந்த நாடகத்துக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. யார் தடை விதித்திருக்கின்றனர்? ஜனநாயக சர்க்கார். காங்கிரஸ் பாஷையில் சொல்லவேண்டுமானால், ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் சர்க்கார், 'பொதுஜன' சர்க்கார்தான் இந்த நாடகத்துக்குத் தடை விதித்துள்ளனர்.

பதினைந்து ஆண்டுகளாகக் கண்டுபிடிக்கப்படாத குற்றம் என்ன இந்த நாடகத்தில் இப்போது கண்டுபிடிக்கப்பட்டது? இன்று இந்த நாடகத்துக்குத் தடை விதித்த 'ஜனநாயக' சர்க்காராவது, "இந்த நாடகம் இன்னின்ன குற்றங்களைக் கொண்டதாக இருப்பதால், இதனைப் பொதுமக்கள் முன்னிலையில் நடிக்கக்கூடாது; எனவே இந்த நாடகத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது" என்று ஏதாவது விளக்கம் கூறிற்றா? இல்லை அரசாங்கம் ஏதாவதொன்றுக்குத் தடை விதிக்கும்போது அதற்குரிய காரணங்களை நாட்டிலுள்ள பொதுமக்களும் தெரிந்துகொள்ளும் முறையில் விளக்கம் கூறாமல், ஓநாய் ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்ற கதைபோல், அறிவு நூல்களை அடக்குமுறைக்கு இரையாக்குவது முறையா என்று கேட்டால், அப்படிக் கேட்பவர்களையும் அடக்குமுறைக்கு ஆளாக்கும் போக்கில் இன்றைய அரசாங்கம் கெடுபிடி செய்தால்கூட அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படமாட்டோம்.

ஏனென்றால், இன்றைய ஆட்சிமுறையை, அடக்குமுறை ஒன்றின் துணைகொண்டு மட்டுமே நடத்த முடியும் என்ற அளவிலும் அடிப்படையிலும் அமைத்திருப்பதை, நாடு விடுதலையடைந்த நாளிலிருந்து இன்றுவரை நாம்பார்த்துக்கொண்டுதான் வருகிறோம்.

மக்களின் உரிமை என்று கருதப்படுமெதற்கும்தடை! எங்கும் தடை! எப்போதுமதடை! மொழி வளர்ச்சிக்குத் தடை! கலை வளர்ச்சிக்குத்தடை! அறிவு வளர்ச்சிக்குத் தடை! கூட்டத்திற்குத் தடை! மாநாட்டுக்குத் தடை! தெருவில் நடந்து செல்வதற்குக் கூடத் தடை! என்ற முறையிலேயே இன்றைய 'பொதுமக்கள்' சர்க்கார் நடந்துகொள்கின்றனர். இதற்குப்பேர்தான் ஜனநாயக சர்க்காராம்!

'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தைத் தடை செய்த சர்க்கார், அந்த நாடகத்தை நடத்தக் கூடாதென்று யார் சர்க்காரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள் என்பதையாவது கூறிற்றா? போகட்டும், குற்றஞ்சாட்டியவர்கள் யார் என்பதை வெளிப்படையாகக் கூறக் கூடாதென்று சர்க்கார் கருதியதாகவே வைத்துக்கொள்வோம். குற்றஞ்சாட்டியவர்கள் என்னென்ன குற்றங்களை அந்தநாடகத்தில் கண்டுபிடித்துக் கூறினர் என்பதையாவது நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு சர்க்கார் வெளியிட வேண்டாமா!

ஆங்கில ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப் படாத குற்றம்—ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப்படாத குற்றம்—ஓமந்தூரார் ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப் பட்டதென்ற 'பெருமை'யை நிலைநாட்டிக்கொள்வதற்காகவாவது அத்தகைய குற்றச் சாட்டுகளைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டாமா? குற்றச்சாட்டுகளை அறியவும், அறிந்ததை வெளியிடவும் முடியாத இரங்கத்தக்க நிலையிலுள்ளவர்கள் ஆட்சிப் பீடத்தை அலங்கரித்துக் கொண்டு இருப்பானேன்?

பொதுமக்களின் நலனில் துளியேனும் இவர்களுக்கு கவலையோ கருத்தோ இருக்குமானால், பொதுமக்களுக்குத் தீமை உண்டாக்கக் கூடியதாக இந்த நாடகம் அமைந்திருப்பின், அத்தீமைகளைப் பொதுமக்கள் அறியும்படி செய்வதைவிட்டு, இரண்டே வரியில் தடை உத்தரவை வெளியிடுவது எந்தஜனநாயக முறையைச் சேர்ந்ததென்று கேட்கிறோம்.

இன்றைய ஜனநாயகத்தின் இலட்சணம் எப்படி இருக்கிறதென்பதைப் பொது மக்களுக்கு விளக்கவே 5—9—48ல் காஞ்சி சீர்திருத்த நாடக சபையார், சர்க்காரால் தடை செய்யப்பட்ட 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தைத் திருவத்திபுரத்தில் நடத்தினர். நாடகம் நடந்து கொண்டிருக்கும் போதே போலீசார் நடிகர்களைக் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். நாடகத்தை முன்நின்று நடத்திய காஞ்சிபுரம் தோழர் வே. சம்பந்தன் அவர்களையும் மற்றும் பத்து நடிகர்களையும், நாடக அமைப்பாளர் தோழர் பூங்காவனம் அவர்களையும் போலீசார் கைது செய்துள்ளனர். கைது செய்து நாட்கள் நான்காகியும் இன்னும் விசாரணை தொடங்கப்படவில்லை. விசாரணை தொடங்கப்படாததற்குக் காரணம், என்ன என்பது தெரியவில்லை. ஒருவேளை, எந்தச் செக்ஷனில் இந்த வழக்கை விசாரிப்பது என்ற முடிவுக்கு அதிகாரிகள் இன்னும் வரவில்லையோ என்னவோ. அல்லது விசாரணையின் போது, இந்த நாடகத்தைத் தடை செய்தது எதற்காக என்று கைது செய்யப்பட்டவர்கள் கேட்டால், அதற்கு என்ன விடை கூறுவது என்று அதிகாரிகள், தடை விதித்த சர்க்காரைக் கேட்டிருக்கலாம், சர்க்காரிடமிருந்து விளக்கம் கிடைத்த பின்னர் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். ஆனால், நாடகத்தை

# திருச்சியில் "தூக்குமேடை" நாடகம்

[அண்ணாத்துரை பேச்சு]

6—9—48ல் திருவாரூர் திராவிட நடிகர் கழகத்தினரால் "முரசொலி" பத்திரிகையின் நிதிக்காக C. N. அண்ணாதுரை அவர்கள் தலைமையில், திருச்சி ரத்தினவேலுத் தேவர் ஹாலில் "தூக்குமேடை" என்னும்நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர். தோழர்கள் கருணாநிதி, குழந்தையா, T. K. சீனிவாசன் தோழியர் K. V. ராஜம் முதலியவர்கள் முக்கிய பாத்திரங்களை ஏற்று மிகத் திறமையாக நடித்தனர்—நாடக முடிவில் தோழர் C. N. A. அவர்கள் நடிகர் குழுவினரைப் பாராட்டிப் பேசியதாவது:—

நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் முன்னேற்றமான கருத்துக்களைக் கொண்ட, இம்மாதிரியான நாடகங்கள் நம்நாட்டிற்கு மிகமிகத் தேவை. இந்த நாடகத்தில், திராவிடர் கழகத்தின் கொள்கைகளே மிகவும், நிரம்பியிருக்கிறபடியால், இது கழகத்தின் பிரசார நாடகமாகக் கருதப்படலாம். உண்மையில் அதுவும் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆனால், ஒருகட்சிக் கொள்கைகளைவிளக்குவதற்காக மட்டுமன்றி, பொதுவாகச் சமுதாயத்தில் உள்ள குறைகளையும் கொடுமைகளையும் நீக்குவதற்கான மாதிரியில் நாடகங்கள் அமைத்துக் கட்சிசார்பற்ற எல்லாத் தோழர்களாலும், நடத்தப்பட வேண்டுமென்பது என்னுடைய ஆசை. நாட்டிலே, இப்படிப்பட்ட சமூக சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்ட நாடகங்களுக்குப் பெருத்த ஆதரவு இருக்கிறதென்பதும், அந்தமாதிரியானநாடகங்களை மக்கள் எதிர்பார்க்கிறார்களென்பதும் நன்றாகத் தெரிகிறது. ஆனால், சில கம்பெனிகள் இன்னும் பழைய புராண நாடகங்களையே நடித்து வருவதானது, அவர்கள் தங்களுக்கும் நாட்டிற்கும் தீமையே தேடி வருவதாகும்.

இன்றைய பத்திரிகையில் நான் ஓர் விளம்பரத்தைப் பார்த்தேன். 'நேதாஜி நாடக சபை' என்ற ஒரு குழுவினர், கிருஷ்ணலீலா நாடகம் நடிக்கப் போவதாகப் படித்தேன். இந்தக்கூட்டத்தில் காங்கிரஸ் அன்பர்கள் பலர் வந்திருப்பார்களென்று நம்புகிறேன். நேதாஜியின் வீரவாழ்க்கையைச் சற்று அவர்கள் தங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வாழ்நாள் முழுமையும் தேசத்தின் விடுதலைக்காகவே அர்ப்பணித்த ஓர் மாவீரன், கடல் கடந்துசென்று, வெள்ளையனோடு போரிட்டாவது நாட்டை விடுதலை செய்ய 'ஆர்வங்கொண்டு' அம்முயற்சியிலேயே உயிர்நீத்த மாபெரும் தியாகி—வீரன்—அவர் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிற சபையார் நடத்துகிற நாடகம் 'கிருஷ்ணலீலா' என்றால் காங்கிரஸ்அன்பர்கள் வெட்கப்படவேண்டாமா? இந்த நிலை கருதிக் கோபம்அடையவேண்டாமா? அந்தக் கம்பெனி முன்னின்று, சாத்விக மறியல் செய்து, ஒன்று கம்பெனிப் பெயரை மாற்றுங்கள். இல்லையேல், சமுதாய உயர்வுக்கான நாடகங்களை நடத்துங்கள் என்று கம்பெனியாருக்கு அறிவுறுத்த வேண்டாமா? நேதாஜி நாடக சபையினர் "தூக்குமேடை" நாடகம் நடத்தத் தேவையில்லை. "ஜான்ஸி ராணி"யின் நாடகத்தை நடத்தலாமே. 'தண்டி யாத்திரை' நடத்திக் காட்டலாமே, "பகவத்சிங் சிந்திய இரத்தம்" என்ற ஓர் நாடகம் நடத்தலாம். "குமரன் படுகொலை" நடத்தலாம். உப்புச் சத்தியாக்கிரகத்தைப்பற்றி நடத்திக்காட்டலாம். இவைகளெல்லாம் தீர்ந்துபோய் வேறு கதை கிடைக்கவில்லை என்றால் சர்தார் வேதாரத்தினத்தைப் பற்றியாவது கதை அமைக்கலாம். இதைவிட்டுவிட்டு அந்த மாவீரன் பேரால் அமைக்கப்பட்டிருக்கும் நாடக சபையார் கிருஷ்ணலீலாவா நடத்துவது? ஆனால் ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்பதற்கு ஓர் காரணம் இருக்கிறது. நேதாஜி என்ற பெயர் மார்க்கட்டில் செலாவணி ஆகும் லேபில் என்பது அவர்களுக்குத் தெரியும். கிருஷ்ணலீலா ஆடினால் பாமர மக்களிடமிருந்து காசு குவியும் என்பதும் தெரியும். இரண்டையும் சேர்த்துவைத்து இலாபம் சம்பாதிக்கும் முயற்சியே தவிர, இது காங்கிரஸ் பக்தியையோ, கலை வளர்ச்சியையோ காட்டுவதாகாது.

நமது நாடக மேடையில் இதுவரையில் நாம் "நிஜ புருஷர்களை"க் காட்டியதே இல்லை. கண்ணுக்குத் தெரியாத, கருத்துக்கு எட்டாத, கற்பனை உருவங்களையே காட்டியிருக்கிறோம். இந்திரன் தோன்றியிருக்கிறான். குபேரன் வந்திருக்கிறான். அனுமாரைப் பார்த்திருக்கிறோம். அல்லி பவழக்கொடியைக் கண்டிருக்கிறோம். அசோக வனத்திலே அம்மை சீதாதேவியைக் கண்டிருக்கிறோம். பெரும்பாலான நாடகங்களில் நாரதரைச் சந்தித்திருக்கிறோமே தவிர, நாட்டின் மாவீரர்கள், நாட்டின்மீது படை எடுத்தவர்கள், அவர்களை எதிர்த்து நின்றவர்கள், உலகப் பெரியார்கள் ஆகியவர்களைக் காட்டியிருக்கிறோமா? மாவீரன் அலெக்சாண்டரை நீங்கள் நாடக மேடையில் கண்டதுண்டா? அவனை எதிர்த்து நின்ற புருஷோத்தமனைக் கண்டீர்களா? நண்பர் கருணாநிதி இந்நாடகத்தில் ஓர் இடத்தில் குறிப்பிட்டாரே "நஞ்சுண்டு மாண்ட சாக்ரடீசை"ப்பற்றி. அந்த உருவத்தை நாடக மேடையில் பார்த்திருக்கிறீர்களா! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கிரேக்க நாட்டுக் கடைவீதிகளில் அந்தக் கிழவன் நின்றுகொண்டு உண்மையைப் போதித்தான். ஊரிலுள்ள சதிகாரர்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவனைச்சிறையிலடைத்து நஞ்சுகொடுத்தனர். இதை நானிலம் அறியும் நாடகமேடை மூலம் நாம் இவரை நாட்டுக்கு அறிமுகப்படுத்தி இருக்கிறோமா? நாடகமேடை மட்டுமென்ன, நம்முடைய சரித்திர புத்தகங்களில்கூட இவர்களின் படங்களைப்பார்ப்பது அரிது. நம்முடைய சரித்திர புத்தகத்தில் ஜடைமுடியுடன் இராமன் நிற்க பக்கத்தில் சீதை நிற்க, நாலடி தள்ளி தம்பி லக்ஷ்மணனிருக்க, புதரின் மறைவில் மானிருக்க, இராமன் முகத்தில் தயக்கமும், சீதை முகத்தில் ஆவலும் தோன்றச் சித்தரிக்கும் படத்தைப் பார்க்கிறோம். எத்தனை காலத்துக்கு இப்படிப்பட்ட நிலை இருப்பது? இந்த நாடக சீர்திருத்தத்தை ஏன் ஒரு தனிப்பட்ட கட்சியினுடைய வேலையாகக் கருதவேண்டும்? காங்கிரஸ் நண்பர்களுக்கு நான் கூறுகிறேன், இந்தக் காரியத்தை நீங்கள் ஏற்று நடத்துங்கள்; நம்முடைய நாடக மேடையில் காட்டப்பட வேண்டிய காட்சிகள் ஏராளமாக உள்ளன. நான் இந்த நாடகத்தில் காட்டப் பட்டதுபோல் பெரியார் படத்திறப்பு விழாவை நடத்திக்காட்டும்படி உங்களுக்குக் கூறவில்லை. விதவையின் கண்ணீரை, அண்ணனுக்கும் தம்பிக்கும் ஏன் சண்டை வருகிறது என்கிற நிலைமையை, தகப்பனுக்கும் மகனுக்கும் பேதம் ஏற்படும் காரணத்தை, நல்லவன் ஏன் கெட்டவனாகிறான் என்பதை, கொலைக்காரன் உள்ளத்திலும் கருணை உண்டு என்கிற நிலைமையை, விளக்கும் நாடகங்களை ஏன் நடத்தக்கூடாது என்று காங்கிரஸ் நண்பர்களைக் கேட்கிறேன்.

இன்றைய சர்க்கார் சினிமாக்களுக்கு "சென்ஸார் போர்டு" வைத்திருப்பது போல் நாடகக்கலையையும் கட்டுப்படுத்தவும், அறிவு வளர்ச்சிக்கு அதன் மூலம் தடை விதிக்கவும் துணிந்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் நீங்கள் பார்த்திருக்கலாம் "நாடக ஆராய்ச்சிக் குழு" ஒன்று அமைக்க இருக்கிறார்கள் என்கிற செய்தியை. ஏற்கெனவே நம்முடையசர்க்கார் அறிவு வளர்ச்சியைக் கெடுக்கும்விதத்தில் பலதடவைகள்

விதித்திருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சி நண்பர்களின் 'செங்கொடி காதத சிகப்பி'' என்ற நாடகத்தைத்தடை செய்திருக்கிறார்கள். அதைப்போன்ற ஒரு தெலுங்கு நாடகத்தைத் தடுத்திருக்கிறார்கள். நமது இயக்க நாடகங்களான "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" "போர்வாள்" ஆகிய நாடகங்களைத் தடுத்திருக்கிறார்கள். காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரியும் நாடக மேடையில் விஸ்வநாத தாஸ் பாடிவந்த "கொக்குப் பாட்டை" பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தடுத்தும் அந்தத் தடையை அந்த நடிகர் மீறியதும், அதனால் ஆனவிளைவுளும். அதே ஏகாதிபத்திய முறையில் ஜனநாயகசர்க்கார் நடந்துகொள்வதைப்பார்த்துக் காங்கிரஸ் நண்பர்கள் வெட்கமடைய வேண்டாமா? கலை உள்ளம் படைத்தவர்கள், இப்படி நாடாளும் சர்க்கார் தடைகளை விதித்துக்கொண்டே இருக்க அநுமதித்து விட்டால் அது எங்கு கொண்டு போய்விடுமென்பதை யோசிக்க வேண்டாமா? தடுக்கப்பட வேண்டிய நாடகங்களையா இவர்கள்உண்மையில் தடுத்திருக்கிறார்கள்? "சபாபதி" என்னும்கதை நாடகமாகவும் சினிமாவாகவும் வந்திருக்கிறது. இதிலே தமிழாசிரியர் எவ்வளவு கேவலமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். தமிழாசிரியர் வகுப்பில் வந்து உட்கார்ந்ததும் தூங்குவதும், பிள்ளைகள் காகிதத்தைக் கிழித்துப் போடுவதும் தமிழ் வளர்ச்சிக்கு வழிசெய்வதாகுமா? இப்படிப்பட்ட கதைகள்சர்க்காரின் கண்களுக்குத் தெரியவில்லை- இரணியன் தெரிகிறான். இரணியன் நாடகத்தைத் தடுத்ததற்கு சர்க்கார் என்னதான் காரணம் சொன்னார்கள்? பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் தீட்டப்பட்ட இந்த நாடகத்தைப் பல முறை பல இடங்களில் நடத்தி இருக்கிறார்கள். அந்தக் காலத்து மந்திரிகளான பி. டி. ராஜனைப்போன்றவர்கள் தலைமை வகித்து நடத்திக்கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நாடகத்தை இப்போது தடைசெய்யக் காரணமென்ன? அந்த நாடகத்தில் சில இடங்களில் ஆரியரை இழித்தும் பழித்தும் காட்டப்பட்டிருக்கிறது என்று கூறக் கூடும். அப்படி இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அதற்காக இந்தச் சர்க்காருக்குக் கோபம்வருவானேன்? அல்லது வேறு யாருக்குத்தான் கோபம் வருவானேன்? ஆரியர், திராவிடப் பிரச்சினையைப் பற்றி நாம் பேசும்போதெல்லாம் ஆரியராவது திராவிடராவது எல்லாம் கலந்துவிட்டது. ஆரியர் என்றொரு தனி இனம் இல்லை, என்றெல்லாம் பேசும் பார்ப்பன மேதைகள் கூறுவதிலே நாணயமோ உண்மையோ இருக்குமானால், பார்ப்பனர்களும்தான் எதற்காக நாடகத்தின் மீது கோபம் கொள்ள வேண்டும்? ஆரியர் என்றொரு இனமே இப்போதில்லை என்று சொல்லுவது உண்மையாக இருக்குமானால், ஆரியரைப்பற்றிக்கண்டிக்கும்போது யாருக்கும் கோபம் வரக்காரணம் இல்லையே! ஜப்பான்காரனைப் பற்றி இழித்தோ பழித்தோ ஒரு நாடகம் எழுதப்பட்டால் அதைப்பார்க்கும் ஜப்பானியனுக்குக்கோபம் வரலாம், அல்லது அவனுடைய உளவாளிக்குக் கோபம் வரலாம்-மற்றவர்களுக்கு வருமா? அதைப்போலத்தானே ஆரியரைக் கண்டித்து நாடகம் காட்டப்பட்டால் ஆரியர்களுக்கோ அல்லது அவர்களது ஏஜெண்டுகளுக்கோ கோபம் வரலாம். நாடகத்தைத் தடுத்துவிட்டார்கள். இன்று செய்தி கிடைத்தது, காஞ்சிபுரத்தை அடுத்த திருவத்திபுரத்தில் அந்தத் தடையை மீறி நாடகத்தை நடத்தியிருக்கிறார்கள். நண்பர்களே! நாட்டு முன்னேற்றத்திற்கான சீர்திருத்த நாடகங்களை நடத்திக் காட்டுங்கள். இப்படிப்பட்ட கொட்டகைகளில் மட்டுமல்ல, வெட்ட வெளியில், மக்கள் இலவசமாகக் காணும்படி இந்த நாடகத்தைப் போல் நூற்றுக்கு நூறு பிரசாரநாடகங்களாகவே இருக்கவேண்டுமென்பது மில்லை. அப்படிப்பட்ட நாடகங்களைக்கருணாநிதி போன்றநண்பர்கள் நடத்திக் காட்டலாம். வேறுகட்சியினரும் கலை ஆர்வம் படைத்தவர்களும் அப்படிப்பட்ட நாடகங்களைக்கூட வேண்டாம், "லைட் கலர்" (Light Colour) நாடகங்களை நடத்திக் காட்டலாம். நான் 5, 6, வருஷங்களுக்கு முன்பு பிரசாரநாடகமாகவே ''சந்திரோதயத்''தைஎழுதியிருக்கிறேன். இப்போது லைட் கலர் 'ஓர் இரவு' 'வேலைக்காரி' தீட்டியிருக்கிறேன். இப்படிப்பட்ட நாடகங்கள் எல்லோராலும், பார்க்கப்படவும்,கொள்கைகள் பலருக்குப் பரவவும் வழிசெய்யும். நண்பர் கருணாநிதி இப்படிப்பட்ட நாடகங்களை எழுதிக் கம்பெனிகளுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## இன்றைய பர்மா

உலகத்தின் கவனத்தைக் கவரும் அளவுக்கு இன்று பர்மாவின் உள்நாட்டுக் குழப்பம் தன் உச்சநிலையை அடைந்திருக்கிறது.

அமைதியும், கலகமுமான நிலைகளே மாறி மாறி, பர்மாவின் சரித்திரத்தை நிரப்புகின்றன. 19ம் நூற்றாண்டில் "மிண்டான்" என்னும் பேரரசனுக்குப் பின், அவனுடைய நெருங்கிய உறவினர் 76 பேர்களைக் கொன்றுவிட்டுப் பட்டத்தைக் கைப்பற்றினான் "டின்பா" எனும் கொடுமைக்காரன். 1885-ல் அவன் பிரிட்டிஷ்காரரால் விரட்டப்பட்டான். பர்மா வெள்ளையர் வசமாயிற்று. வெள்ளையர் தங்கள் ராணுவ பலத்தின் உதவியால் பர்மாவில் நிலவிய கலகங்களையெல்லாம் அடக்கி அமைதியை நிலைநாட்டினர். இவ்வாண்டு ஜனவரியில் தான் பர்மா, டொமினியன் அந்தஸ்தை மறுத்து முழு விடுதலை பெற்றனர். விடுதலைக்குப் பின் உலகையே அதிரச் செய்யும் வகையில் பர்மியத் தலைவன், விடுதலை பெற்ற பர்மாவின் முதல் மந்திரி, அவுங்சான் கொலை செய்யப்பட்டார். அந்தச் சம்பவம், நெடு நாளைக்குப் பின் பர்மாவில் உள்நாட்டுக் குழப்பம் திரும்பவும் ஆரம்பமாய்விட்டது என்பதையே எடுத்துக் காட்டிற்று. அவுங்சானுக்குப் பின் "தாக்கின் நூ" மந்திரி சபை அமைத்தார்.

சென்ற நவம்பரில் தொல்லைகள் ஆரம்பமாயின. தேசியமாக்கப்பட வேண்டிய பர்மாவில் வெளிநாட்டாரின் வாணிபமும், நிலங்களும் நஷ்டஈடு தரப்படாமலேயே பறிக்க வேண்டும் என்று கம்யூனிஸ்டுகள் வற்புறுத்தினர். நல்ல நெல் விளைச்சல் உள்ள 40 லட்சம் ஏகர் நிலங்கள் இந்தியருக்குச் சொந்தமானவை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தாக்கின் நூ, நியாயமான நஷ்டஈடு தரப்படவேண்டும் என்பதில் கண்டிப்பாகவே இருந்தார்.

கம்யூனிஸ்டுகள் இருபிரிவினராக உள்ளனர். வெள்ளைக் கொடியினர் White Flags ] என்பவர்கள்தான் அங்கீகரிக்கப்பட்ட அதிகார பூர்வமான கம்யூனிஸ்டுகள். சிகப்புக் கொடியினர் [Red Flags] என்ற மற்றொரு பிரிவினர், 1946ம் ஆண்டிலிருந்தே பர்மாவிற்குள்ளேயே, மத்திய பர்மாவில் ஒரு தனி அரசாங்கமே நடத்தி வருகின்றனர்.

மேற்கத்திய மாகாணமாகிய அரக்கானில், 1946-ல் ஆரம்பித்த கலகங்கள் ஓயவில்லை. அரசியல் கட்சிகளைத்தவிர வழிப்பறிகொள்ளைக்காரர்கள் அதிகமாகி இருக்கின்றனர். அவர்கள் தரும் தொல்லைகளால் அரசாங்கத்தின் வருமானம் பெரிதும் தடைப்பட்டு விட்டது.

இந்நிலைமையைச் சமாளிக்க 'தாக்கின் நூ' வெள்ளைக் கொடியினருடன் சேர்ந்துவிட்டால் போரில் திறமை வாய்ந்த மலைச் சாதியினர் கலகம் செய்வார்கள். இப்படிச் சீரழியும் பர்மாவின் எதிர்காலம் கவலைக்கிடமான நிலையிலேயே இருக்கிறது.

குத் தடை விதித்தபோது அதற்குரிய காரணங்களைக் கூறாத சர்க்கார் இப்போது மட்டும் கூறும் என்றோ, கூறுவதற்குரிய நிலையினைப் பெற்று இருக்கிறதென்றோ நாம் நம்பவில்லை. எனவே கைது செய்யப்பட்ட தோழர்களை, ஏதாவதொரு செக்ஷனை முன்னிறுத்திச் சிறைக்கு அனுப்பிவிடுவார்கள். ஆனால், இந்த நாடகத்துக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீங்கும் வரையில் இந்த நாடகத்தை நடிப்பதின்மூலம் சிறைக்கூடத்தை நிரப்புவதற்கு ஆயிரக்கணக்கான தோழர்கள் தயாராக உள்ளனர் என்பதை மட்டும் சர்க்கார் மறந்துவிடக் கூடாது.

*

## வெட்கப்படாமல்

3-ம் பக்கத் தொடர்ச்சி

முறையில் தன்னுடைய அடக்குமுறைப் பாணங்களை உங்கள்மீது வீசினான்; நாங்கள் அப்படியல்ல; நாலாறு இருபத்துநாலு என்ற பெருக்கல் முறையில் எங்களுடைய அடக்குமுறைப் பாணங்களை வீசுகிறோம்; நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்தது நடக்கிறது; எனவே எங்களை ஆதரியுங்கள்" என்று இன்றைய 'ஜனநாயக' அரசாங்கம் மக்களை நோக்கிக் கூறுகின்றது.

சென்னை அரசாங்கம் இவ்விதமாகத்தான் இன்று தன்னுடைய ஆட்சிமுறையை மேற்கொண்டுள்ளது என்று நாம் சொன்னால், எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாம் இப்படித்தான் கூறுவோம் என்று காங்கிரசன்பர்கள் தங்கள் கண்ணையும் கருத்தையும் மூடிக்கொண்டு கதறுவார்கள். ஆனால், சென்னை அரசாங்கத்தின் ஆட்சிமுறை எப்படி இருக்கிறதென்பதைக் காங்கிரஸ் சர்க்காரை முழுக்க முழுக்க ஆதரிக்கும் ஒரு காங்கிரஸ்ஏடே விளக்கி இருக்கிறது.

"ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார் கூடச், சில பல சமயங்களில் பாதை தவறி நடந்து விடுவதை நாம் கண்டிக்காமல்இருக்க முடியவில்லை. சுதந்தரப் போராட்ட சமயத்தில் கடமை அடக்க அந்நிய சர்க்கார் என்னென்ன முறைகளைக் கையாண்டார்களோ, அதே முறைகளை நாமும் கையாண்டால் அது கண்டிக்கப்படவேண்டியதாகிறது"

என்று எழுதியிருக்கிறது. எந்தக் காங்கிரஸ் ஏடு இவ்விதம் எழுதியிருக்கிறதென்பதை அறிய ஆவல் கொள்வீர்கள். அதனையும் கூறிவிடுகிறோம். காங்கிரஸ் வட்டாரத்திலேயே எழுத்தாளர்களில் மிகச் சிறந்தவர் என்று கருதப்படும் தோழர் ம. ப. பெரியசாமித்தூரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் "காலச்சக்கரம்" என்ற பத்திரிகையில்தான் 5—9—48ல் இவ்விதம் எழுதப்பட்டிருக்கிறது. தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள் ஏதாவதொன்றை எழுதுகிறார் என்றால், அந்த எழுத்து, கருத்தற்ற—காகிதத்தை நிரப்பும் வெறும் எழுத்தாக மட்டும் இருக்க முடியாதென்று, அவரை எழுத்தாளர்களில் சிறந்தவராக மதிக்கும் எவரும் எண்ணியே தீருவர். இந்தி எதிர்ப்பாளர்களைக் காடுகளில் கொண்டுபோய் விடும் காட்டுமிராண்டி முறையைக் கண்டிப்பதாகக் கருதி, 'போலீசாரின் பழைய புத்தி இன்னும் போகவில்லை' என்று எழுதிய 'தினசரி'யின் கருத்தற்ற-கசட்டெழுத்தாகத் தோழர் பெரியசாமித்தூரன் அவர்களின் எழுத்தை எண்ணிவிட முடியாது. இவருடைய எழுத்துவன்மை வெறும் ஏட்டுச் சுரைக்காயாக மட்டும் இல்லாமல், எண்ணத்தில் எழுச்சியையும் மாறுதலையும் உண்டாக்குவதோடு, உண்மைகளை உள்ளபடியே வெளியிடும் உரத்தையும் பெற்றுள்ளதென்றே நாமும் கருதுகிறோம்.

சென்னை அரசாங்கத்தின் ஜனநாயகப் போக்கைக் கண்டிக்க முன்வந்த தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள், தம்முடைய கண்டன உரையைத் தொடங்கும்போதே,

"ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக் கொள்ளும் நமது சர்க்கார்"

என்று தொடங்கியிருக்கிறார். இந்தச் சொற்றொடரைக் காங்கிரசன்பர்கள்—அதிலும் இன்று நடைபெறும் ஆட்சிமுறை ஜனநாயக முறையில் நடக்கிறதென்று திட்டவட்டமாக முடிவுகட்டிக்களிப்புக் கடலில்மூழ்கி இருக்கும் காங்கிரசன்பர்கள் மிகவும் நன்றாய் ஊன்றிக் கவனிக்க வேண்டும். 'ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார்' என்று எழுத்தாளர்களில் தலைசிறந்த பெரியசாமித்தூரன் அவர்கள் எழுதியுள்ளதில், அந்த

'என்று'

என்ற சொல்லை மிகமிக ஊன்றிக் கவனிக்க வேண்டுகிறோம். அதே சமயத்தில் தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள் யார் — எப்படிப்பட்டவர் என்பதை மறந்துவிட வேண்டாமென்றும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"ஜனநாயக சர்க்காரிய நமது சர்க்கார்"

என்று கூறாமல், அவர்,

"ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார்"

என்று ஏன் கூறினார்? இதில் அடங்கியுள்ள பொருள் என்ன? 'என்று சொல்லிக்கொள்ளும்' என்பதற்குரிய தனிப்பொருள் என்ன? என்பனவற்றைக் காங்கிரசன்பர்கள் தங்கள் அமைதியை ஓரளவுக்காவது வரவழைத்துக் கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டுகிறோம்.

இன்றைய சர்க்கார் உண்மையாக ஒரு ஜனநாயக சர்க்காராய் இருந்தால், அத்தகைய ஒரு சர்க்காரை அவர் ஜனநாயக சர்க்கார் "என்று சொல்லிக்கொள்ளும்" நமது சர்க்கார் என்று எழுதுவாரா? ஏன் அந்த 'என்று சொல்லிக்கொள்ளும்' என்ற சொற்றொடரை அங்கு அமைத்தார்?

**இப்பொழுது நடப்பது ஜனநாயக சர்க்கார் அல்ல. ஆனால் ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்கிறது.**

என்பதையன்றோ தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள் தம்முடைய கருத்து நிரம்பிய எழுத்துவன்மையால் விளக்கியிருக்கிறார்.

கருத்துக் குருடர்களும் அறிவு விளக்கம் பெறவேண்டுமென்று கருதிய 'காலச்சக்கர' ஆசிரியர் மேலும் கூறுகிறார்,

"நமது சர்க்கார்கூடச், சிலபல சமயங்களில் பாதை தவறி நடந்து விடுகிறது"

என்று. எழுத்தோடு கருத்தையும் பொதிந்து பொதுமக்களுக்குவழங்க விரும்பிய தூரன் அவர்கள், தம்முடைய சர்க்கார் நடந்துகொள்ளும் முறையை இங்கு நன்கு விளக்கியுள்ளார். மேலே உள்ள சொற்றொடரில், நாம் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள கூட்டல்—

பெருக்கல் கணக்குத் தொக்கி நிற்பதைக் காணலாம்.

ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார்கூடச் சில சமயங்களில் பாதை தவறி நடந்துவிடுகிறது என எழுதலாம் என்று குறிப்பிட முன்வந்த ஆசிரியரை, அவருடைய அறிவு, உண்மைக்கு மாறாகப்போகக் கூடாதென்று தடைசெய்து,

சில

என்ற சொல்லுக்குப் பக்கத்திலேயே,

பல

என்ற சொல்லையும் சேர்த்து, "நமது சர்க்கார்கூட" அதாவது, ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்கார்கூடச் சில பல சமயங்களில் பாதை தவறி நடந்துவிடுவதை நாம் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை என்று எழுதும்படி செய்திருக்கிறது. 'சில' என்ற கூட்டல் கணக்கில் மட்டுமல்ல, 'பல' என்ற பெருக்கல் கணக்கிலேயே இன்றைய சர்க்கார் அடக்கு முறைகளைக் கையாளுகிறது என்று தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள் விளக்கியுள்ளார்.

இவ்வளவு தொலைவு இன்றைய 'ஜனநாயக' சர்க்காரைக் கண்டித்த தோழர் பெரியசாமித்தூரன் அவர்களே இந்தி எதிர்ப்பியக்கம் பிடிவாதத்துக்காகச் செய்யப்படுகிறதென்றும், அந்த இயக்கம் எந்த நியாயமான வாதத்தின் அடிப்படையிலும் நடக்கவில்லையென்றும், இந்தி கட்டாயபாடமாக இல்லை என்பதற்கான விளக்கத்தை ஏற்கெனவே திட்டவட்டமாகச் சொல்லிவிட்டோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு அவர் எழுதியதற்குக் காரணம் இல்லாமலும் இல்லை. அண்மையில் சென்னைக்கு வந்து போன கவர்னர் ஜெனரல் இராசகோபாலாச்சாரியார் அவர்கள்,

"இனம் இனத்தைக் காக்க வேண்டும்"

என்ற பழமொழியைக் காங்கிரஸ்காரர்கள் மறந்துவிடக்கூடாதென்று சொன்னதை மனதில் வைத்துக்கொண்டுதான்போலும், தோழர் தூரன் அவர்கள் தாம் ஒரு காங்கிரஸ் இனமாய் இருப்பதால், காங்கிரஸ் சர்க்காரின் இந்தித் திட்டத்தில் தலையிட்டு அதனைக் கண்டிக்கக் கூடாதென்பதற்காகவே அவ்விதம் எழுதினார் என்று நினைக்கிறோம். என்றாலும், இனம் இனத்தைக்காக்க வேண்டுமென்பதில் எவ்வளவு பற்றுதல் இருந்தபோதிலும், உண்மையை மறைத்து இனத்தைக் காக்கும் இயல்பு எவருக்குமே இருக்கக்கூடாது. 'காலச் சக்கரமும்' காங்கிரஸ் ஏடுதான். அதன் ஆசிரியர் தோழர் பெரியசாமித்தூரன் அவர்களும் காங்கிரஸ் இனம்தான். இதுபோலவே "பிரசண்ட விகடன்" என்ற பத்திரிகையும் காங்கிரஸ் ஏடுதான். அதன் ஆசிரியர் தோழர் நாரண துரைக்கண்ணன் அவர்களும் காங்கிரஸ் இனம்தான். தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள்,

> "இந்தி எதிர்ப்பு இயக்கம் என்பதாக ஒரு குறிப்பிட்ட கட்சி வேலை செய்து வருவது எல்லோரும் அறிந்ததுதான். இந்தி கட்டாய பாடமாக்கப்படவில்லை என்று பல தடவை சென்னை சர்க்கார் விளக்கமாக எடுத்துச் சொல்லியும், 'இந்தி கட்டாய பாடமாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறது' என்றே சாதிக்கிறார்கள் இவர்கள். நம்மைப்பொறுத்தவரை, 'இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி அர்த்தமற்றது—அவசியமற்றது' என்றும், இந்தி கட்டாய பாடமாக இல்லை என்பதற்கான விளக்கத்தையும் ஏற்கெனவே திட்டவட்டமாகச் சொல்லிவிட்டோம்."

என்று எழுதுகிறார். ஆனால் தோழர் நாரண துரைக்கண்ணன் அவர்கள்,

> "நம் செந்தமிழ் மொழி இந்தி நுழைவால் கெடும் என்பதை உணர்ந்து அறப்போர் தொடுத்திருக்கும் தலைவர்களை நாம் வாழ்த்துகிறோம்.
>
> இந்தி கட்டாயமில்லை என்று சொல்வது சட்டப்படி சரியாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் இந்தி கட்டாய பாடந்தான் என்பதை விளக்கி ஏற்கெனவே இப்பத்திகளில் நாம் தெளிவாக்கி இருக்கிறோம். இந்தியை எதிர்த்து அறப்போர் தொடங்கப் பெற்ற பிறகு, நம் மாவட்ட முதலமைச்சர் அவர்களும் செப்பனீடு பகுதியில் அமைச்சராக இருக்கும் ஸ்ரீ பக்தவத்சலம், ஸ்ரீ கோபால் ரெட்டி போன்ற மந்திரிமார்களும் எந்த இடத்தில் எதைப் பேசுவது என்ற சம்பந்தா சம்பந்தமில்லாமல் இந்திக்கு 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு பேசியிருக்கிறார்கள். இது ஒன்றே இந்தியைக் கட்டாயமாக்கி இருக்கிறார்கள் என்பதற்கு மேலும் கிடைத்த ஒரு ருசுவாகும்"

என்று எழுதியிருக்கிறார். 'காலச் சக்கரம்' காங்கிரஸ் ஏடு. 'பிரசண்ட விகட'னும் காங்கிரஸ் ஏடு. தோழர் பெரியசாமித்தூரனும், தோழர் நாரணதுரைக்கண்ணனும் காங்கிரஸ்காரர்கள்தான். என்றாலும், ஒரே முகாம்—ஒரே இனம் (கட்சி)—ஒரே கொள்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட இருவரும் இந்தியைப் பற்றிய தங்கள் கருத்துக்களை ஒன்றுக்கொன்று எந்தவிதத்திலும் பொருந்தாத முறையில் வெளியிட்டுள்ளனர். இதில், இன்னொன்று குறிப்பிடத்தக்கது என்னவென்றால், இருவரும் எழுத்தாளர்களில் சிறந்தவர்கள் மட்டுமல்ல, இருவரும் எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர்கள். தோழர் பெரியசாமித் தூரன் அவர்கள் முதலாவது எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர். தோழர் நாரணதுரைக் கண்ணன் அவர்கள் இரண்டாவது எழுத்தாளர் மாநாட்டுத் தலைவர்.

இதில் ஒரே ஒரு வேறுபாடுதான். அதாவது 'காலச்சக்கரம்' என்ற இதழ் ஓராண்டை முடித்து இரண்டாவது ஆண்டாக இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 'பிரசண்ட விகடன்' பதினாறு ஆண்டுகளை முடித்து பதினேழாவது ஆண்டாக இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர வேறு எந்தவிதமான வேறுபாட்டையும் இரு எழுத்தாளர்களுக்கும் இடையே காணமுடியாது. என்றாலும் சென்னை சர்க்காரின் இந்தித் திட்டத்தில் இருவருக்குமுள்ள கருத்துவேறுபாடுகள் பதினாறுக்கும் ஒருவுக்கும் உள்ள வேறுபாட்டைவிடப் பெரிதாகவே இருக்கிறது. தோழர் பெரியசாமித்தூரன் அவர்கள்,

> "இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி அர்த்தமற்றது—அவசியமற்றது—இந்தி கட்டாயபாடமாக இல்லை"

என்று கூறுகிறார். ஆனால் தோழர் நாரண துரைக்கண்ணன் அவர்கள்,

> "நம் செந்தமிழ் மொழி இந்தி நுழைவால் கெடும்" என்பதை

உணர்ந்து அறப்போர் தொடுத்திருக்கும் தலைவர்களை நாம் வாழ்த்துகிறோம்..........................நடைமுறையில் இந்தி கட்டாய பாடந்தான்"

என்று கூறுகிறார். இந்தி எதிர்ப்பை ஒருவர் வைகிறார். ஒருவர் வாழ்த்துகிறார். இது, கால அளவையும், அறிவின் எல்லையையும், அனுபவத்தையும் பொறுத்து அவரவர்களுக்கு ஏற்பட்ட கருத்தாக ஒருவேளை இருக்கலாம். பத்து ஆண்டுகளுக்கு முன் இந்தி எதிர்ப்பு நடந்தபோதும் 'பிரசண்ட விகடன்' இந்தி எதிர்ப்பை ஆதரித்தது. ஆனால் அப்போது 'காலச் சக்கரம்' இல்லை. இன்று நடக்கும் இந்தி எதிர்ப்பைக் 'காலச் சக்கரமும்,' 'பிரசண்ட விகட'னும் ஒருங்கே காணும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. அன்றைய இந்தி எதிர்ப்பு அரசியலாரால் ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சிறைக்கு அனுப்பப்பட்டும், இரு தமிழ் வீரர்களின் உயிர் பலி வாங்கப்பட்டும் வெற்றிபெற்றது. ஆனால், இன்றைய இந்தி எதிர்ப்புக்கு அரசியலார் கையாளும் நடவடிக்கைகள், இந்தி எதிர்ப்பாளர்களை உயிரோடு சித்திரவதை செய்வது என்ற முறையில் உள்ளன. கொலையைப் பார்க்கிலும் சித்திரவதை மிகவும் மோசமானது — கொடுமையானது.

எனவே இந்தி எதிர்ப்பை ஆதரிக்கு 'பிரசண்ட விகட'னைவிட ஒரு படி மேலே போய் இந்தி எதிர்ப்பை எதிர்க்கும் 'காலச்சக்கரம்' இன்றைய சர்க்காரின் அடக்குமுறையைக் கண்டித்திருக்கிறது.

அநாகரிகம்
ஏகாதிபத்ய வெறி
வெட்கம்
மிருகத்தனம்
கொடுஞ்செயல்
கேடிபிடி

என்ற இன்னபிற சொற்களால் "காலச்சக்கரம்" என்ற காங்கிரஸ் இதழ் இன்றைய ஜனநாயக சர்க்காரைக் கண்டித்திருக்கிறது. 5-9-48ல் வெளிவந்த இதழில் எழுதப்பட்டிருப்பதைக் காங்கிரசன்பர்களின்பார்வைக்குத் தருகிறோம்.

"ஆகஸ்டு 26-ம் தேதியன்று மறியல் செய்துவிட்டுத் திரும்பிய தொண்டர்களைப் போலீசார் நடத்தியவிதம் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். மறியல் முடிந்த பின்னர் அணிவகுத்துப் புறப்படுகையில் போலீசார் அவர்களை லாரியில் ஏற்றிச் சென்னைக்கு அப்பால் 32 மைல் தொலைவில் கொண்டுபோய், எட்டு மாதக் கர்ப்பிணி ஒருவரையும் உட்பட ஒரு சவுக்குமரக் காட்டில் இறக்கி விட்டுவிட்டு வந்தார்கள் என்ற செய்தியைக் கேட்டு உண்மையிலேயே நாம் மனம் வருந்துகிறோம். இந்த மிருகத்தனமான செயலை, அந்தக் காலத்தில் வெள்ளை ஏகாதிபத்திய சர்க்கார் செய்தது. அதே பாடத்தைப் பொதுஜன சர்க்கார் என்று சொல்லிக்கொள்ளும் நமது சர்க்காரும் திருப்பிப் படித்தால் இதைவிட வெட்கக்கேடு வேறு ஒரு காரியம் இருக்க முடியாது. அமைதிக்குச் ஒழுங்கிற்கும் பங்கம் ஏற்படும் முறையில் தொண்டர்கள் நடந்திருந்தால் அவர்களைக் கைது செய்து அவர்கள் செய்த குற்றத்தை விசாரணை செய்து தண்டனையளிக்க வேண்டியது நியாயமாயிருக்க, வெள்ளைக்கார ஆட்சியில் நடந்ததுபோல், மைல் கணக்கில் லாரியில் ஏற்றிச் சென்று எங்காவது நடுக்காட்டில் விட்டுவிட்டு வருவது போன்றதுமான அநாகரீகமான, ஏகாதிபத்திய வெறி பிடித்த ஆட்சிக்காரர்கள் செய்வது போன்ற—நடவடிக்கைகளை இன்றைய அரசாங்கம் செய்து வருவதைக் கண்டால் நாம் வெட்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

சட்டத்தை மீறியதாகக் கருதப்படுபவர்களைக் கைது செய்தால், குற்றமிருந்தால் விசாரித்துத் தண்டிப்பது சட்ட வரம்பிற்குட்பட்ட செயல். நகர எல்லைக்கு அப்பால் கொண்டுபோய் விடும் முறையை வெள்ளையர் கையாண்டனர் — ஆனால் அவற்றையெல்லாம் மீறிக் கைது செய்தவுடன் எங்கோ நெடுந் தொலைவில் கொண்டுபோய் விடுவது எந்த முறையில் பொருந்தும் என்று நமக்குத் தெரியவில்லை. அந்தக் காலத்தில் வெள்ளையன் செய்தபோது, எவ்வளவு கடுமையான சொற்கள் இருக்குமோ அவ்வளவையும் சேர்த்து நாம் கண்டித்தோம். ஆனால் அதே முறையை இன்று நாம் கையாண்டால் அதன் பொருள் என்ன?

இதில் இன்னொரு முறையும் கையாளப்படுவதாகத் தெரிகிறது. அப்படித் தொலை தூரத்தில் கொண்டுபோய் விடுபவர்களை, எந்த 'பஸ்'ஸும், வண்டியும் ஏற்றி வரக்கூடாது என்பது போலீஸ் அதிகாரிகளின் கண்டிப்பு. வழி நெடுக மறியல் தொண்டர்களைத் திரும்பி நகர் வந்து சேர, கால் நடையல்லாமல் வேறு சாதனங்கள் பெற முடியா வண்ணம் கண்டிப்புச் செய்வது கொடுஞ் செயலாகும். இவ்வளவு தூரம் 'கேடிபிடி' செய்ய உண்மையிலேயே அந்த அதிகாரிகளுக்குச் சர்க்கார் உத்தரவளித்திருக்கிறதா? அப்படி உத்தரவளிக்காமலிருந்தால், இம்மாதிரி முறைகளைத் தான்தோன்றித்தனமாகக் கையாளுகிறார்களா என்று நமக்குத் தெரியவில்லை. பொதுஜன சர்க்காரில் இது மாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெறுவதைக் கண்டு நாம் வெட்கப்படுகிறோம்."

என்று எழுதியிருக்கிறது. 'வெட்கப்படுகிறோம்' என்ற தலைப்பில், 'காலச்சக்கரம்' எழுதிய கண்டனத்தைக் கண்டு சென்னை அரசாங்கம் வெட்கப்படுகிறதோ இல்லையோ அது நமக்குத் தெரியாது. எனினும், தோழர் பெரியசாமித் தூரன் சென்னை அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டு 'வெட்கப்படுகிறோம்' என்று எழுதியதன் பொருள், எழுத்தாளர்கள் அனைவருமே வெட்கப்படுகின்றனர் என்பதாகும். ஏனென்றால், அவர் எழுத்தாளர்களால் முழுமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டு, எழுத்தாளர் மாநாட்டுக்குத் தலைவராய் இருந்தவர். எனவே அவர் விடுக்கும் கண்டனம் எழுத்தாளர்கள் அனைவரும் விடும் கண்டனமாகும் என்பதை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆகையால், இந்தக் கண்டனத்தைப் படிக்கும் எந்த அறிவுள்ள மனிதனும், சென்னை அரசாங்கத்தின் மிருகத்தனமான அடக்குமுறையைக் கண்டு வெட்கித் தலைகுனிந்து வேதனைப்படாமல் இருக்கமுடியாது.

# கேட்டீர்களா கதையை!

இப்பொழுது சென்னை மாகாணத்திற்குக் கவர்னராக வந்திருக்கும் பவநகர் மகாராஜாவின் உத்தியோகநியமனம், அதற்குச் சம்பந்தப்பட்டவர்களின் ஒப்புதலோடு நியமிக்கப்படவில்லை என்றும்; இவரைச் சென்னைக் கவர்னராக்குவதென்று டில்லியில் முடிவுசெய்து அறிக்கை வெளியிடுவதற்கு முன் இது சம்பந்தமாகச் சென்னை முதலமைச்சருடன் கலந்து பேசவில்லை யென்றும்; பின்னர், பண்டிதநேரு அவர்கள், இந்த உத்தியோக நியமனம் பற்றி ஏதாவது ஆட்சேபனை உண்டா என்று சென்னை முதலமைச்சரை டிரங் டெலிபோன் மூலம் கேட்டதாகவும்; அதற்கு முதலமைச்சர் மகாராஜாவைப் பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதாகையால் இதுபற்றித் தாம் எதுவும சொல்லுவதற்கில்லை என்று கூறியதாகவும்; மேலும் அவர் பண்டித நேருவிடம், வரப்போகும் புதிய கவர்னர் நிர்வாகத்தை நடத்துவதில் உதவியாக இருக்கக்கூடியவரா என்று கேட்டதாகவும்; அதற்குப் பண்டிதநேரு அவர்கள், வரப்போகும் புதிய கவர்னர் மந்திரி சபைக்கு உதவியாக இருக்கக்கூடியவரா என்பது தமக்குத் தெரியாதென்றும், ஆனால், மகாராஜா, ஒரு நல்ல சமத்துவ மனப்பான்மையுள்ளவர் என்றும் தெரிவித்ததாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

இந்தச் செய்தி 8—9—48-ல் வெளிவந்த "மெயில்" பத்திரிகையில் 'பிரஸ் ரிப்போர்ட்' என்ற தலைப்பின்கீழ் வெளிவந்திருக்கிறது.

எனவே, ஒரு மாகாணத்துக்குக் கவர்னராக வருபவர் யார்—எப்படிப்பட்டவர் — நிர்வாகத் திறமையுள்ளவரா—நிர்வாகத்தை நடத்துவதற்கு உதவியாகவாவது இருக்கக்கூடியவரா எனபன போன்ற முக்கிய விஷயங்களைக்கூட அந்த மாகாணப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் முதலமைச்சரிடம் தெரிவிக்காமல், மேலிடம் தன் எதேச்சதிகாரத்தைச் செலுத்துகிறதென்றால், இதைவிட ஒரு மாகாணத்தைக் கேவலப்படுத்தும் முறை வேறு என்ன இருக்கமுடியும்? என்று கேட்கிறோம்.

இது மட்டுமல்ல, சென்னைக்கு இன்னாரைக் கவர்னராக நியமித்திருக்கிறோம் என்பதைக்கூட மேலிடம் சென்னை முதலமைச்சருக்கு முன்கூட்டித் தெரிவிக்கவில்லையாம். இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால், பண்டிதநேரு அவர்களுக்கே பவநகர் மகாராஜாவின் நிர்வாகத் திறமையைப் பற்றி ஒன்றுமே தெரியாதாம். 'பழகுவதற்கு நல்லவர்' (Social Man) என்பதைத் தவிர, வேறொன்றும் புதிய கவர்னரைப் பற்றிப் பண்டித நேருவுக்குத் தெரியாதாம்.

நிலைமை இவ்விதம் இருக்க, வந்திருக்கும புதிய கவர்னர், யாருடைய தயவினால் இந்தப் பதவியைப் பெற்றார் என்பது தெரியவில்லை. சென்னை முதலமைச்சருக்கு இந்த நியமனம் பற்றி ஒன்றும் தெரியாது —தெரிவிக்கப்படவும் இல்லை. பண்டித நேரு அவர்களுக்குப் புதிய கவர்னரின் நிர்வாகத் திறமையைப் பற்றியே ஒன்றும் தெரியாது. என்றால் இந்த நியமனத்துக்குப் பொறுப்பு யார்? ஒரு தனிப்பட்டவரின் முயற்சியே பவநகர் மகாராஜவைச் சென்னைக்குக் கவர்னராக்கிவிட்டதென்பதைத் தவிர, இதிலிருந்து நாம் அறியக்கூடிய உண்மை வேறென்ன இருக்கிறது?

முதலமைச்சரால் அறியப்படாத ஒருவர்—பண்டிதநேரு அவர்களால் விளக்கம் கூறமுடியாத ஒருவர் — மாகாணப் பொதுமக்களால் விரும்பப்படாத ஒருவர் — டெலிபோன் மூலம் இவர்தான் உங்கள் கவர்னர் என்று அறிமுகப்படுத்தப்பட்ட ஒருவர்—சென்னை மாகாண வாசியல்லாத ஒருவர், சென்னை மாகாணத்துக்குக் கவர்னராக வந்திருக்கிறார்.

இப்படிப்பட்ட ஒருவரை நாங்கள் கவர்னராக ஏற்றுக்கொள்ள முடியாதென்று பொதுமக்கள் கூறினால் அவர்களுக்குச் சிறைத் தண்டனை! எப்படி இருக்கிறது நியாயம்? இதுதான் ஜனநாயக அரசாங்கமா? பொதுமக்களே பதில் கூறுங்கள்.

## செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட் கோர்ட்

O. P. 45/48.

ராமதாஸ்—மனுதார்

ராமச்சந்திரன் வகையரா—

கவுண்டர் மனுதார்கள்

ஷை நெம்பர் 3, 5, 6, 9, 10 கவுண்டர் மனுதார்களான 1. துரைசாமி 2. கிருஷ்ணன் 3. வெங்கடாஜலம் 4. சின்ன சடையன் 5. குப்புசாமி ஆகியவர்களுக்குத் தெரிவிக்கும் நோடீஸ்:— பிராதில் கண்ட சொத்துக்களைப் பாகப் பிரிவினை செய்து தன்பாகம் 1/25 ஐ சுவாதீனம் பெறவும் இதர பரிகாரங்கள் அடையவும் வாதி பாபர் மனு கொடுத்திருக்கிறபடியால் ஷை பாபர் மனுவின்பேரில் ஆட்சேபனை சொல்லிக்கொள்ள 15—9—48-ல் வாயிதாப் போட்டிருக்கிறது என்பதை அறியவும்.

M. Arunachala Iyer,
Pleader for Petitioner.
3—9—48

## செங்கல்பட்டு சப்கோர்ட்டு

T. A. 563/48 In O. S. 32/48.

C. D. பாஷியம் முதலியார்,
வாதி.

நாராயண அய்யர், வகையரா
பிரதிவாதிகள்.

ஷை நெம்பரில் கோர்ட்டார் உத்திரவுப்படி 3-ம் பிரதிவாதியைத் ஆயத் சாயப்பக்கு சம்மன்பேரில் பேப்பரில் பப்ளிக் செய்ய வாய்தா 14—9—48-ல் போடப்பட்டிருக்கிறது ஏதாவது ஆக்ஷேபனை இருந்தால் ஷை வாய்தாவிற்கு நேரில் வந்து தெரிவித்துக்கொள்ளவும்.

இப்படிக்கு.

M. A. லக்ஷிமிநரசிம்மாச்சாரியார்
வாதிவக்கீல்.

செங்கல்பட்டு, 4—9—48.

## திருமண அழைப்பு

15—9—48-ல் காஞ்சிபுரத்துக்கடுத்த வையாவூரில் தோழர் வி. எம். கோதண்டனுக்கும் தோழியர் பவுனம்பாளுக்கும் காஞ்சிபுரம் தோழர் வி. கண்ணப்பர் அவர்கள் தலைமையில் சீர்திருத்தத் திருமணம், தோழர்கள் R. கிருட்டினசாமி, A. K. வெங்கிட்ராமன், K. T. S மணி, C. P. இராசமாணிக்கம் ஆகியோரின் சொற்பொழிவுடன் நடைபெறும். அன்பர்கள் வருக.

Edited Printed & Puplished by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.